www.Padasalai.Net www.CBSEtips.in

# எண்ணும் எழுத்தும் – முதல் பருவம் – 2023–24
## மாதத் தேர்வு (ஜுலை)

வகுப்பு – 4 சமூக அறிவியல் நேரம் : 45 நிமி
பெயர் : மதிப்பெண் : 15

**பத்தியைப் படித்து அனைத்து வினாக்களுக்கும் விடையளி.**

ஒரு பள்ளியில் மாணவர்களைத் தமிழ்நாட்டின் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களுக்குச் சுற்றுலா அழைத்துச் செல்ல திட்டமிட்டனர். அவர்களின் சுற்றுலாப் பயணத்திட்டம் அப்பள்ளியின் அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்பட்டது.

சுற்றுலாப் பேருந்து வழித்தடம் :

சென்னை → மகாபலிபுரம் → திருச்சி → மதுரை → திண்டுக்கல் கோயம்புத்தூர் → நீலகிரி → கோயம்புத்தூர் → திருப்பூர் → ஈரோடு சேலம் → விழுப்புரம் → சென்னை.

**கல்விச் சுற்றுலாப் பயணத்திட்டம்**

| நாள் | நேரம் | பயணவிவரம் |
|---|---|---|
| முதல் நாள் | காலை 9.00 மணி | சென்னையிலிருந்து புறப்படுதல் |
| | காலை 12.00 மணி | மாமல்லபுரம் சென்றடைந்து குடைவரைக்கோவில், புலிக்குகை, பஞ்சபாண்டவர் ரதம் ஆகியவற்றைப் பார்வையிடுதல் |
| | மாலை 5.00 மணி | திருச்சிக்குப் புறப்படுதல். இரவு திருச்சியில் ஓய்வு. |
| இரண்டாம் நாள் | காலை 8.00 மணி | கரிகாற் சோழன் மணிமண்டபம், கல்லணையைப் பார்வையிடுதல் |
| | காலை 10.00 மணி | கல்லணையிலிருந்து புறப்படுதல் |
| | மதியம் 1.30 மணி | மதுரையை அடைதல். வைகை ஆறு, திருமலைநாயக்கர் மகாலைப் பார்வையிடுதல். |
| | மாலை 6.00மணி | மதுரையிலிருந்து புறப்பட்டு கோயம்புத்தூர் அடைந்து இரவு ஓய்வு |
| மூன்றாம் நாள் | காலை 8.00 மணி | கோயம்புத்தூரில் சிறுவாணி அணை, கோவை குற்றாலம் பார்வையிடுதல் |
| | மதியம் 3.00 மணி | நீலகிரியைப் பார்வையிடுதல் |
| | இரவு 8.00 மணி | சென்னைக்குப் புறப்படுதல் |
| நான்காம் நாள் | காலை 6.00 மணி | சென்னைக்கு வந்தடைதல் |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com
Scanned with OKEN Scanner

www.Padasalai.Net www.CBSEtips.in

**வினாக்கள்:**

1. மாணவர்கள் முதல்நாள் பார்த்த இடங்கள் யாருடைய ஆட்சிப்பகுதியாக இருந்தன?

   அ) சேரர் ஆ) சோழர் இ) பாண்டியர் ஈ) பல்லவர்

2. சுற்றுலா வழித்தடத்தில் விடுபட்ட சேரரின் ஆட்சிப்பகுதி எது?

   அ) கரூர் ஆ) பெரம்பலூர் இ) திருநெல்வேலி ஈ) புதுக்கோட்டை

3. சுற்றுலாப் பயணத்திட்டத்தில் மாணவர்கள் பார்வையிட்ட ஆறுகள் எவை?

   அ) பாலாறு, வைகை ஆ) வைகை, பொய்கை

   இ) காவிரி, வைகை ஈ) காவிரி, பொய்கை

4. எந்தக் கொடியுடைய மன்னரின் மணிமண்டபத்தைப் பார்த்தனர்?

   அ) வில் கொடி ஆ) மீன்கொடி இ) நந்திக் கொடி ஈ) புலிக் கொடி

5. மாணவர்கள் பார்த்த சுற்றுலா இடங்களை அரசுகளின் அடிப்படையில் வரிசைப்படுத்துக.

   அ) சேரர், சோழர், பாண்டியர் மற்றும் பல்லவர்

   ஆ) பல்லவர், சோழர், பாண்டியர் மற்றும் சேரர்

   இ) பாண்டியர், பல்லவர், சேரர் மற்றும் சோழர்

   ஈ) சோழர், பல்லவர், சேரர் மற்றும் பாண்டியர்

**விடைகள்:**

1. ஈ) பல்லவர்
2. அ) கரூர்
3. இ) காவிரி, வைகை
4. ஈ) புலிக் கொடி
5. ஆ) பல்லவர், சோழர், பாண்டியர் மற்றும் சேரர்

www.Padasalai.Net



Scanned with OKEN Scanner
Kindly send me your study materials to padasalai.net@gmail.com